பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
18 05 2024 **SATURDAY** 7 15 **PM**

வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. மக்களவைக்கு 5வது கட்டமாக வாக்குப்பதிவு நடைபெறவுள்ள 6 மாநிலங்கள் மற்றும் 2 யூனியன் பிரதேசங்களுக்கு உட்பட்ட 49 தொகுதிகளில் பிரச்சாரம் இன்று மாலை நிறைவடைந்தது.
2. மத்தியில் நிலையான ஆட்சி அமையும் பட்சத்தில், இந்தியாவின் பாதுகாப்பு உறுதி செய்யப்படும் என்று பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.
3. அரசியல் லாபத்திற்காக பிஜேபி மக்களிடையே பிரிவினையை தூண்டி வருவதாக காங்கிரஸ் மூத்த தலைவர் திரு. சல்மான் குர்ஷித் குற்றம் சாட்டியுள்ளார்.
4. கேரளா, தமிழகம் மற்றும் புதுச்சேரியில் அடுத்த சில நாட்களுக்கு கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
5. தாய்லாந்து ஓப்பன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் சிராக் ஷெட்டி – ரங்கி ரெட்டி இணை இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது.

>>>>><<<<<

மக்களவைக்கான 5ஆம் கட்ட தேர்தல் பிரச்சாரம் இன்று நிறைவடைந்தது.

6 மாநிலங்கள் மற்றும் 2 யூனியன் பிரதேசங்களுக்கு உட்பட்ட 49 தொகுதிகளில் வரும் திங்கட்கிழமை வாக்குப்பதிவு நடைபெற உள்ளது.

இந்தத் தொகுதிகளில் பிரச்சாரத்திற்கான கால அவகாசம் முடிந்ததை அடுத்து பிரச்சாரத்தில் ஈடுபட்ட வெளியூர்களைச் சேர்ந்தவர்களை தொகுதிகளை விட்டு வெளியேறினர்.

பிரச்சாரம் முடிவடைந்ததை அடுத்து, அதன் பின்னர் கடைபிடிக்க வேண்டிய நெறிமுறைகளை அனைத்து அரசியல் கட்சிகளும் முழுமையாக பின்பற்ற வேண்டும் என்றும் தேர்தல் ஆணையம் வலியுறுத்தியுள்ளது.

>>>>><<<<<

மத்தியில் நிலையான ஆட்சி அமையும் பட்சத்தில், இந்தியாவின் பாதுகாப்பு உறுதி செய்யப்படும் என்று பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

ஹரியானா மாநிலம், அம்பாலாவில் இன்று தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டு பேசிய அவர், கடந்த 20 ஆண்டுகளாக நமது அண்டை நாடான பாகிஸ்தான் தொடர்ந்து தீவிரவாத செயல்களுக்கு துணைநின்றதாகவும், தற்போது, அந்நாடு பொருளாதார நெருக்கடியில் சிக்கி தவிப்பதாகவும் தெரிவித்தார்.

மத்தியில் பலவீனமான அரசு இருந்த போது, ஜம்மு காஷ்மீரில் எந்தவித மாற்றமும் ஏற்படவில்லை என்றும், பிஜேபி தலைமையிலான உறுதியான அரசு 370-வது அரசியலமைப்பு சட்டப்பிரிவு நீக்கியதாகவும் திரு. நரேந்திர மோடி குறிப்பிட்டார்.

ஒரே பதவி – ஒரே ஓய்வூதியம் திட்டத்தை கடந்த 40 ஆண்டுகளாக காங்கிரஸ் அரசு அமல்படுத்தாமல் இருந்தது என்றும், தமது அரசு அதனை அமல்படுத்தியுள்ளதாகவும் அவர் கூறினார்.

விவசாயிகளுக்கான வருவாய் ஆதரவு திட்டத்தில், காங்கிரஸ் ஆட்சியின் போது 60 ஆயிரம் கோடி ரூபாய் மட்டுமே வழங்கப்பட்டதாகவும், தமது ஆட்சியில் விவசாயிகளுக்கு இதுவரை ஆறரை லட்சம் கோடி ரூபாய் வழங்கப்பட்டதாகவும் திரு. நரேந்திர மோடி தெரிவித்தார்.

உத்தரபிரதேச மாநிலத்தில் பகுஜன் சமாஜ் கட்சியின் தலைவர் செல்வி மாயாவதி, **Basti** தொகுதியில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் உரையாற்றினார்.

பீகார் மாநில தலைநகர் பாட்னாவில் பிரச்சாரம் மேற்கொண்ட காங்கிரஸ் மூத்த தலைவர் திரு. சல்மான் குர்ஷித், அரசியல் லாபத்திற்காக மதத்தை பிஜேபி பயன்படுத்தி வருவதாக குறிப்பிட்டார்.

ராஷ்ட்ரீய ஜனதா தள கட்சித் தலைவரும், பீகார் மாநில முன்னாள் துணை முதலமைச்சருமான திரு. தேஜஸ்வி பிரசாத் யாதவ், **Saran, Vaishali, Madhubani** மற்றும் **Sitamarhi** மக்களவைத் தொகுதிகளில் பிரச்சாரம் மேற்கொண்டார்.

கடந்த 10 ஆண்டுகளாக மத்தியில் ஆட்சியில் இருந்த பிஜேபி அரசு, பீகார் மாநில வளர்ச்சிக்காக எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை என்று அவர் குறை கூறினார்.

மாநிலத்தில் ஆட்சிப் பொறுப்பில் உள்ள பிஜேபி மற்றும் ஐக்கிய ஜனதா தள கட்சிகள், மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை என்று அவர் குறிப்பிட்டார்.

பீகாரில் வேலைவாய்ப்பின்மை அதிகரித்து வருவதாகவும், இளைஞர்கள் வாழ்வாதாரத்திற்காக வெளிமாநிலங்களுக்குச் செல்வதாகவும் திரு. தேஜஸ்வி பிரசாத் யாதவ் தெரிவித்தார்.

>>>>><<<<<

டிஜிட்டல் பணப்பரிவர்த்தனையில் இந்தியா முன்னணியில் உள்ளதாக தொலைத்தொடர்பு செயலர் டாக்டர் நீரஜ் மித்தல் கூறியுள்ளார்.

புதுதில்லியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், தொழில்நுட்பத்தின் பயன்பாடு அதிகரித்துள்ளதே இதற்கு காரணம் என்று கூறினார்.

அரசின் சேவைகளை மக்களுக்கு விரைவாக கொண்டு செல்வதில் தொழில்நுட்பம் முக்கியப் பங்கு வகிப்பதாகவும் டாக்டர் நீரஜ் மித்தல் தெரிவித்தார்.

>>>>><<<<<

சர்வதேச அருங்காட்சிக தினம் இன்று கொண்டாடப்பட்டது.

அருங்காட்சியகங்களை கட்டுவதற்கும், பாதுகாப்பதற்கும், அதனை ஊக்குவிப்பதற்காகவும் 1977ஆம் ஆண்டு முதல் ஒவ்வோராண்டும் மே மாதம் 18ஆம் தேதியன்று சர்வதேச அருங்காட்சியக தினம் உலகம் முழுவதும் கொண்டாடப்படுகிறது.

வளமான பாரம்பரியம் மற்றும் கலாச்சாரத்தை புரிந்து கொள்ள அருங்காட்சியகங்கள் உதவுகின்றன.

இந்த ஆண்டு ‘கல்வி மற்றும் ஆராய்ச்சிக்கான அருங்காட்சியகங்கள்’ என்ற தலைப்பில் இந்த தினம் கொண்டாடப்பட்டது.

இந்நாளையொட்டி, தமிழகத்தில், வேலூர் அருங்காட்சியகத்தில் மாணவர்களுக்கான பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டன.

இதில் கலந்து கொண்ட மாணவிகள், இந்நிகழ்ச்சி தங்களுக்கு பயனள்ளதாக அமைந்தது என்று குறிப்பிட்டனர்.

>>>>><<<<<

தமிழகத்தில் உள்ள அரசு மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணிபுரியும் மருத்துவ கடைநிலை ஊழியர்கள் சுழற்சி முறையில் மூன்று விதமான பணிநேரங்களில் பணியமர்த்தப்படுவார்கள் என்று மக்கள் நல்வாழ்வுத்துறை அரசாணை வெளியிட்டுள்ளது.

அனைத்து மருத்துவப் பணியாளர்கள், தூய்மைப் பணியாளர்கள், உதவியார்களுக்கும் இந்தப் பணிநேரம் பொருந்தும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் தீர்ப்பின் அடிப்படையில் இந்த பணிநேரம் அமல்படுத்தப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, காலை 6 மணி முதல் பிற்பகல் 2 மணிவரையும், மதியம் 1 மணி முதல் இரவு 9 மணிவரையும், இரவு 8 மணி முதல் காலை 6 மணி வரை என பணிநேரங்கள் வரையறுக்கப்பட்டுள்ளன.

மொத்த பணியாளர்களில் 50 சதவீதம் பேர், காலைநேரப் பணியிலும், 25 பேர் பிற்பகல்நேர பணியிலும், 25 சதவீதம் பேர் இரவு நேர பணியிலும் ஈடுபட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

இந்திய கடல் எல்லைக்குள் மீன்பிடித்ததாக இலங்கை மீனவர்கள் 7 பேரை இந்திய கடலோர காவல்படையினர் கைது செய்தனர்.

தமிழகத்தில் மீன்பிடி தடைக்காலம் அமலில் உள்ளதால், விசைப்படகு மீனவர்கள் மீன்பிடிக்க கடலுக்குச் செல்லவில்லை.

இந்த சூழலை பயன்படுத்தி, இலங்கை மீனவர்கள் கன்னியாகுமரி கடல் பகுதிக்குள் அத்துமீறி மீன்பிடித்தபோது அவர்கள் கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடம் இந்திய கடலோர காவல்படையினர் விசாரணை நடத்தி வருகின்றனர்.

>>>>><<<<<

கேரளாவில் அடுத்த ஐந்து நாட்களுக்கு கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

பத்தனம்திட்டா இடுக்கி மற்றும் கோட்டயம் மாவட்டங்களுக்கு அடுத்த இரண்டு நாட்களுக்கு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

திருவனந்தபுரம், கொல்லம், ஆலப்புழா மற்றும் எர்ணாகுளம் ஆகிய மாவட்டங்களுக்கு அடுத்த இரண்டு நாட்களுக்கு ஆரஞ்ச் எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

பத்தனம்திட்டா, இடுக்கி மற்றும் மலப்புரம் ஆகிய மாவட்டங்களுக்கும் இன்று ஆரஞ்ச் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மோசமான வானிலை மற்றும் பலத்த காற்று வீசக்கூடும் என்பதால், கேரளா மற்றும் லட்சத்தீவு கடல்பகுதிக்கு மீனவர்கள் மீன்பிடிக்கச் செல்ல வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இதற்கிடையே, தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் அடுத்த நான்கு நாட்களுக்கு இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு. செந்தாமரைக்கண்ணன் தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<

தென்தமிழக கடலோரப் பகுதிகளில் சூறாவளிக் காற்று வீசக்கூடும் செந்தாமரைக் கண்ணன் கேட்டுக் கொண்டுள்ளார்.

நீலகிரி மாவட்டத்தில் கனமழைக்கான ஆரஞ்ச் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதை அடுத்து சுற்றுலாப் பயணிகளின் வருகை குறைந்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

கன்னியாகுமரி மாவட்டத்தில், கனமழைக்கான சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள நிலையில், 90 பேர் கொண்ட பேரிடர் மீட்புக் குழுவினர் திருவட்டாறு, கிள்ளியூர், அகஸ்தீஸ்வரம் தாலுகாக்களில் கண்காணிப்புப் பணியில் ஈடுபடவுள்ளனர்.

மேலும் அங்குள்ள அணைகளில் நீர்மட்டம் அதிகரித்து வருவதாகவும், அருவிகளில் குளிப்பதற்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளதாகவும் எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>><<<<<

தாய்லாந்து ஓப்பன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் சிராக் ஷெட்டி – ரங்கி ரெட்டி இணை இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது.

இன்று நடைபெற்ற ஆடவர் இரட்டையர் பிரிவு அரையிறுதிப் ஆட்டத்தில், இந்த இணை தைவானின் **M.C Lu** மற்றும் **Tang Kai Wei** இணையை 21-11, 21-12 என்ற செட்கணக்கில் வென்றது.

நாளை நடைபெறும் இறுதிப்போட்டியில் இந்த இணை தைவானின் **Liu Yi -** சீனாவின் **Chen Boyang** இணையை எதிர்கொள்கிறது.

>>>>>END<<<<<